பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

விடுதலை

இதழ்: 27 சனிக்கிழமை 4-11-1989

RECEIVED 1989-11-6 Periodicals Division

# நாலு கிராமங்களில் ஒரே நாளில் 101 கொலை!

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியிலும், மத்திய பகுதியிலும் 101 இளைஞர்களின் சடலங்கள் உருத்தெரியாத நிலையில் சிதைந்து கிடக்கக் காணப்பட்டதாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப் பகுதிகளைச் சேர்ந்த நாலு கிராமங்களிலேயே இவர்களது சடலங்கள் ஆங்காங்கே சிதறுண்டு கிடந்ததாகும் அரசபடைகளினதும், ஜே. வி. பி யினதும் பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைகள் முன்னரிலும் பார்க்க தற்போது பன்மடங்கு வேகத்தில் நிகழ்வதாகவும் தென்னிலங்கைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அக் கிராமங்களிலுள்ள சிங்கள மக்கள் அயலூர்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டதாகவும் நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக அரச படைகள் சுற்றி வளைத்து இளைஞர்களைக் கைது செய்வதும், சித்திரவதை செய்து தடுப்புக் காவலில் வைப்பது மட்டுமின்றி ஈவிரக்கமற்ற முறையில் தீமூட்டி உருத் தெரியாத வண்ணம் சடலங்கள் கருக்கப்படுவதும் தென்னிலங்கையில் நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டன.

## இந்தியப் பொதுத்தேர்தல்

# 9வது மக்களவையின் பிரதமர் யார்?

# எதிர்க்கட்சியினரிடையே இழுபறி?

(சென்னையிலிருந்து நமது நிருபர்)

இம்மாதம் 22, 24, 26 ஆகிய திகதிகளில் நடைபெறவிருக்கும் இந்தியப் பொதுத் தேர்தலில் 19 மாநிலங்களிலும் 6 யூனியன் பிரதேசங்களிலுமாக சுமார் 6900 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். பிரதான போட்டி இந்திரா காங்கிரசுக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியாகிய தேசிய முன்னணிக்குமிடையே நடைபெறுகிறது.

எதிர்க்கட்சியினரிடையே பிரதமர் பதவிக்கான போட்டியும் நிலவுகிறது. வி. பி. சிங், தேவிலால், சந்திரசேகர், அஜித்சிங் போன்ற தலைவர்கள் ஒவ்வொருவரும் பிரதமராய் வருவதற்குரிய எதிர்பார்ப்புகளுடன் உள்ளவர்களாவர்.

இ. காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து விலகி, போஃபோர்ஸ் ஊழல் குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டு வந்ததன் மூலம் அரசியல் கவனம் பெற்ற வி. பி. சிங்கை உறுதியாக ஆதரித்து நின்றவர் ஹரியானா முதல்வர் தேவிலால் ஒருவர்தான். ஆனால் அவரது குரலும் இப்போது மாறத் தொடங்கியிருக்கிறது

"எனக்கு ஆசையில்லை தான். ஆனாலும் நான் பிரதமராக வரவேண்டுமென்று பலரும் ஆசைப்படுகிறார்கள்" என்று நிருபர்களிடம் உரையாற்றும் போது தேவிலால் கூறினார். ஹரியானா முதல்வராக இருக்கும் திரு. தேவிலால் பாராளுமன்றத்திற்கு இம்முறை போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வி. பி. சிங்கை பிரதமராக்கியே திருவேன் என்று கூறி வந்த தேவிலால், இப்போது தலைகீழாக மாறி "வி. பி. சிங்கை பிரதமராக்க நான் முயற்சிப்பேன் ஆனாலும், அது என் ஒருவன் கையில் இல்லை; தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் எம். பி. க்கள் முடிவு செய்ய வேண்டிய விடயம் அது" என்று சுருதியை மாற்றியுள்ளார்.

ஜனதா தலைவர்களான சந்திரசேகர், சரண்சிங்கின் மகனான அஜித்சிங் போன்றோரும் பிரதமராகிவிட வேண்டும் என்பதில் விருப்பமுடையவர்களே.

இந்திரா காங்கிரஸ் நாடு முழுவதும் ஒரே சின்னத்தில் போட்டியிடுகிறது. எதிர்க்கட்சிகள் பல்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றன. எதிர்க்கட்சிகள் தமக்குள் கொள்கைகளில் முரண்பட்டுக் கொண்டு காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்பதிலேயே ஒன்றுசேர்ந்துள்ளனர். இந்தக் கூட்டணியில் சேராம

(4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லீம்களுக்கென சுயாட்சிப் பிரதேசம் பெறும் வாய்ப்பு

(திருமலை)

"வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம்கள் எல்லோரும் ஐக்கியப்பட்டு செயல்பட்டதின் காரணமாகவே முதல் தடவையாக இப்பகுதிகளின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், பதினேழு மாகாணசபை உறுப்பினர்களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் எமது ஐக்கியத்தை வெளிப்படுத்தியமையால் தனியான ஒரு சுயாட்சிப் பிரதேசத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது."

இவ்வாறு திருகோணமலையிலுள்ள இறக்கக்கண்டி பள்ளிவாசலில் இடம்பெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனாப். எம் எஸ். ஏ. பி. றாபி முகைதீன் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் திரைப்படவிழா மா. அரசின் ஓராண்டு பூர்த்தி

(திருமலை)

மாகாண அரசின் ஓராண்டு நிறைவை ஒட்டி திருமலையில் சர்வதேச திரைப்பட விழா ஒன்றை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விழாக்குழுத் தலைவரான மாகாண திட்டமிடல் இளைஞர் விவகார அமைச்சர் திரு. ஜோர்ஜ் செனவிரத்தன தெரிவித்தார்.

டிசம்பர் 4-ம் திகதி இந்தியத் திரைப்படங்களும் 5-ம் திகதி சோவியத் திரைப்படங்களும், 7-ம் திகதி கியூபா திரைப்படங்களும், 8-ம் திகதி அமெரிக்க திரைப்படங்களும், 9-ம் திகதி ஜப்பான் திரைப்படங்களும், 10-ம் திகதி இலங்கைத் திரைப்படங்களும் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கோயில்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் மாகாண அரசு நிதி ஒதுக்கீடு

(திருமலை)

திருகோணமலை மாவட்ட வழிபாட்டு இடங்களை புனர் அமைப்பதற்காக வடகிழக்கு மாகாண அரசு 1·45 மில்லியன் ரூபாவை நிதியொதுக்கீடு செய்துள்ளது.

இத்தொகையில் இதுவரை 6 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கலாச்சார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எதிர்மன்னசிங்கம் தெரிவித்தார்.

திருமலை சிவன் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் ரூபாவில் 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணன் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாவில் 25000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வீரகத்திப் பிள்ளையார் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட 1 இலட்சம் ரூபாவில 25000 வழங்கப்பட்டுள்ளது. சனீஸ்வரன் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட 80000 ரூபா வழங்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் முடிந்து வழிபாடுகள் நடைபெறுகிறது

சின்னபத்திர கோணேஸ

(4-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றங்கள் செயல்படும்

(யாழ்ப்பாணம்)

வன் செயல்கள் ஏற்பட்டமையைத் தொடர்ந்து பல வருடங்களாக வடபகுதியில் நீதிபரிபாலனம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கூடிய விரைவில் வட பகுதியின் நீதி மன்றங்கள் இயங்கத் தொடங்கலாம் என்றும், இவற்றிற்குரிய பாதுகாப்பு, ஒழுங்கு நடவடிக்கைகளை, குடி மக்கள் தொண்டர்படையினர் மேற்கொண்டுவருவதாக நீதித்துறையோடு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 4 லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு குடியுரிமை

(அட்டன்)

சுமார் 4 லட்சத்து 35 ஆயிரம் மலைய தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து மலையக மக்களின் குடியுரிமை தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சுமார் 4லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

முன்னரும் இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் கீழ் சுமார் 2 லட்சம்பேர் குடியுரிமை பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பூந்தோட்ட கிராமத்துக்கு புதிய வசதிகள்

(வவுனியா)

கடந்த காலங்களில் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் நகர்ப்புறங்களின் வளர்ச்சியில் காட்டிய சிரத்தையை பின்தங்கிய கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்வதில் காட்டப் படவில்லை இதனால் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் சீரான போக்குவரத்து வசதிகளின்றியும், சுகாதார வசதிகளற்ற நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். குகனேஸ்வரன், வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் கிராம மக்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கே. ஆர். குகனேஸ்வரன் எம். பி. யுடன், வவுனியா

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியருக்கு கடிதம்

### பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ் வழங்குவதில் குறைபாடுகள்

ஐயா,

பதிவாளர் நாயகத்தினால் பணிக்கப்பட்ட பிரகாரம் ஒரு விண்ணப்பத்தில் 3 சான்றிதழ்கள் வழங்கும்படி 5-1-89, 26-1-89, 25-4-89 ஆகிய திகதிகளில் மூன்று விண்ணப்பங்கள் பருத்தித்துறை மேலதிகப் பெரும்பாகப் பதிவாளர் கந்தோரில் சமர்ப்பித்தேன். ஆனால் இந்த மூன்று விண்ணப்பங்களுக்கும் ஒவ்வொரு சான்றிதழ்கள் மாத்திரம் அவரால் வழங்கப்பட்டது. மற்றைய பிரதிகளைத் தருமாறு நேரில் சென்று பலமுறை வினவியபோது காலகதியில் அனுப்பிவைப்போம் என்றார். இப்படியாகப் பலரின் விண்ணப்பங்களுக்கு ஒவ்வொரு பிரதி மாத்திரம் அனுப்பிவிட்டு மற்றவை தற்போது ஏறக்குறையப் பத்துமாத காலமாகியும் அனுப்பவில்லை.

ஓர் விண்ணப்பதாரி 'சான்றிதழுக்கு' விண்ணப்பம் என்ற ரீதியில் ஒரே பதவிக்கு எத்தனை விண்ணப்பம் அனுப்பினாலும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இதைச் சுட்டிக்காட்டி மேலதிக மாவட்டப் பதிவாளரை வினவியபோது தான் தீர்மானித்தால் மாற்ற முடியாது. வேண்டுமானால் பதிவாளர் நாயகத்திடம் போய் வாங்கு எனத் தான்தோன்றித்தனமாகப் பதிலளிக்கிறார். பொது ஜனங்களுடன் பண்பில்லாமல் கதைக்கிறார்.

ஒரு பிரதிக்குரிய பணத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு மிகுதிப் பணத்தையாவது தரும்படி கேட்டபோது அது தன்னுடைய வேலையில்லையென்கிறார்.

ஆகவே ஏழைகளாகிய எங்கள் குறைபாடுகளை நீக்க ஏற்ற வழி வகுப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

கரவெட்டி வடக்கு, க. சுப்பிரமணியம்
கரவெட்டி.

### பஸ்கள் எரிக்கப்பட்டன வடமராட்சி சேவை இல்லை

ஆசிரியர்
விடுதலை

பஸ்களை எரித்ததாலும், தனியார் பஸ் சாரதிகள் தாக்கப் பட்டதாலும் யாழ் நகரில் இருந்து வடமராட்சிப் பகுதிக்குச் செல்லும் பஸ்சேவைகள் தற்போது நடைபெறுவதில்லை.

போக்குவரத்துச் சேவைக்கு சொந்தமான இரண்டு பஸ்களை ஆயுதம் தாங்கிய ஒரு குழு அண்மையில் எரித்தது. தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்களில் சிலரை ஆயுதங் காட்டிப் பயமுறுத்தியதுடன், அவர்களைத் தாக்கியது இக்குழு. பஸ் சேவையை நடாத்தினால் பஸ்களை எரிப்போம், உங்களையும் சுடுவோம் என்றும் மிரட்டினார்களாம். இதனால் இப்பாதை சேவைகளை பஸ் உரிமையாளர்கள் நிறுத்தியுள்ளனர் போக்குவரத்துச் சபையினரும் பஸ்சேவையை நிறுத்திவிட்டனர்.

இப்போது வடமராட்சி மக்கள் கொடிகாமம் ஊடாக மிகவும் சிரமப்பட்டு பணத்தை அதிகம் செலவு செய்தும் யாழ் நகருக்கு வருகிறார்கள்.

ஆண்கள் சைக்கிள் மூலம் வருகிறார்கள். சிலர் வடமராட்சிப் பகுதியிலிருந்து அச்சுவேலி வரை நடந்துவந்து பின் பஸ் ஏறி யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

இப்பகுதி அரசாங்க ஊழியர்கள் உரிய நேரத்துக்கு கடமைக்குச் செல்ல முடியவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

தங்கள் எண்ணங்களில் தோல்வி காண்பவர்கள் எங்களைப் போல பொது மக்களை ஏன் வருத்த வேண்டும்.

சிறுப்பிட்டி கே. ஐயாத்துரை

### கைதடி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை

(நாவற்குழி)

கைதடி அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக அப்பகுதிப் பிரமுகர்கள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. வீ. சுந்தரம்பிள்ளையின் தலைமையில்கூடி ஆராய்ந்தனர்.

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் அமைந்திருக்கும் கர்ப்பிணிகள் சிகிச்சைப் பிரிவை கைதடி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியான டாக்டர் எஸ். எஸ் அருளானந்தம் அவர்களது மேற்பார்வையில் நடாத்துவதெனவும், இதற்கான அனுமதியை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் கைதடி அரசினர் ஆஸ்பத்திரியின் தேவைகள், வசதிகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென ஒரு அபிவிருத்திச்சபையும் தெரிவு செய்யப்பட்டது.

அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. எஸ். எஸ் அருளானந்தமும், செயலாளராக திரு. ச தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### இந்தியத் தேர்தலில் போட்டியிடும் இராசாக்கள்

(சென்னை)

ஒரிசாவிலுள்ள ஏழு முன்னாள் இராசாக்கள் மக்களவைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்ட போதிலும், மக்களாட்சியிலும் பங்கு கொள்ள முனைந்து நிற்கின்றனர்.

இதில் மிகப்பெரிய சமஸ்தானங்களை ஆண்ட இராசாக்கள் தொடக்கம், இராச்சியமே இல்லாத இராசாக்கள் வரை ஏழுபேர் மக்களவைக்கான தேர்தலில் ஒரிசாவிலிருந்து போட்டியிடுகின்றனர்.

இந்த இராசாக்கள் இந்திரா காங்கிரஸ், பாரதீய ஜனதா கட்சி, ஜனதா ஆகிய கட்சிகளில் போட்டியிடுகின்றனர். இக் கட்சிகள் இராசாக்களுக்கும், இராசகுமாரர்களுக்கும் இடம் கொடுத்துள்ளன.

## மாகாண சபையை மாகாண அரசாக மறுவடிவமைக்க வேண்டும்

**ஜயரத்ன மலியகொட**
பொதுச் செயலாளர்,
இலங்கை
பொதுச் சேவையாளர் சங்கம்.

தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஜனநாயக வழித்தீர்வொன்றை தரும் வகையில் அரசியல்-நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கி-பகிர்ந்தளிக்கும் நோக்குடன் அரசமைப்பின் 13 ஆவது பிரிவு திருத்தப்பட்டது; 8 மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இவைகள் நடந்து ஒரு வருடம் கடந்து விட்டது. இன்றைய அரசமைப்பின் கீழ் பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 24 அமைச்சர்களும் 49 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 8 மாகாண சபைகளிலும் 8 முதலமைச்சர்கள், 8 ஆளுநர்கள், 32 அமைச்சர்களுடன், 403 உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரினதும்-பாதுகாப்பு உள்ளிட்ட செலவினங்கள் அரசால் தரப்படுகின்றன. எனினும், மக்களுக்கு இச் சபைகளினால் அளிக்கப்பட்ட சேவைகள் கேள்விக்குரியவைகளாகவே இருக்கின்றன. மாகாண சபை அறிக்கைகளின்படி, மகாணசபைகளுக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

அதிகாரப் பரவலாக்கலுடன் தொடர்புடைய மத்திய அரசின் அமைச்சுக்கள், அடிக்கடி பல முரண்பாடான கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக மக்கள் தொடர்புச் சாதனங்கள் அறிவிக்கின்றன. மகாண சபைகளுக்கு உரிய முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதுதான் உண்மையான நிலை.

மத்தியத்துவம் அடைந்துள்ள அரசியலதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பாக நடக்கும் பலப்பரீட்சையின் பின்னணியை நோக்கும்போது ஒருசில கூர்மையற்ற அரசியற் பண்டிதர்கள் அதிகாரப் பரவலாக்கற் கோட்பாட்டை, தேசிய பிரச்சினை தொடர்பான மார்க்சிச — லெனினிச கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி விளக்க முயலும் அதே வேளை, இன்னுமொருசாரார், இக் கோட்பாடு நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் முயற்சியாகும் என மக்கள் மத்தியில் கூறித்திரிகின்றனர். இந்த நிலையே நாட்டு மக்களை மிகவும் குழப்பமான ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளது. எனவே அரசியல்—நிர்வாக அதிகாரங்களின் பகிர்வு தொடர்பான யதார்த்தத்தை விளங்கிக் கொள்வது அவசியமானது.

1. கடந்த தசாப்தத்தில், முதலாளித்துவ ஜனநாயகம் படிப்படியாக சீர்குலைந்தது. அரசு இராணுவ மயப்படுத்தப்பட்டது சிவில் சுதந்திரம் வரை யறுக்கப்பட்டு அடக்குமுறை மேலோங்கியது. அரசியல் நிர்வாக அதிகாரம் இறுக்கமாக மத்தியத்துவம் அடைந்ததுடன், ஆதிக்கவாத அதிகாரம் மக்களின் மீது சுமத்தப்பட்டது

2. நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான சமமற்ற நிலை தீவிரமடைந்தது.

3. நாட்டின் செல்வங்கள் பகிரப்படாததால், கூர்மையடைந்த ஏற்றத்தாழ்வுகள் கிராமப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகளில் குறை அபிவிருத்திக்கு வழிகோலியது இன, மத மொழி, சாதி, அடிப்படை சமூக நீதிகள் உற்பத்தியில் ஈடுபடும் மக்களை பிரித்து வைத்தது.

4. அரசியல் அதிகாரம் தான் தோன்றித்தனமான சிறு குழுவினர்களின் கைகளில் தேங்கிக் கிடத்தல்

5. வெகுசன கட்டமைப்பு தொடர்பான உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளாமை, இந்த யதார்த்த நிலையின் சமுதாய வரம்புக்குட்பட்ட முறையில் சமுதாய வளர்ச்சி நடைமுறைதொடர்பான முடிவெடுக்க ஜனநாயக அடிப்படையில் ஒவ்வொரு இனத்திற்கும் இருக்கும் உரிமையை அங்கீகரிப்பது மட்டுமல்ல நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்

மத்தியத்துவப்படுத்தப் பட்டுள்ள எதேச்சாதிகார அரசியல் வடிவமைப்புக்கு பதிலாக, புதிய திட்டமொன்றை மக்கள் முன் வைத்தல் அவசியம். எல்லோரினதும் கவனத்திற்கு கீழ்க்காணும் ஆலோசனைகளை முன்வைக்கிறோம்.

1. பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை 100 ஆகவும், அமைச்சுக்களின் எண்ணிக்கையை 07 ஆகவும்

(3ம் பக்கம் பார்க்க)

### இடமாற்றம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் தலைமையலுவலக நிர்வாக உத்தியோகத்தர் கு. ந. பாலச்சந்திரன் துணுக்காய் பிரதேச சபைக்கு ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### விசர் நாய் கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பளையைச் சேர்ந்த மினிவான் உரிமையாளரான முருகேசு என்பவர் விசர்நாய் கடிக்கு இலக்காகி மரணமானார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இவர் கொழும்பு சென்றிந்த போது இவரை விசர்நாய் கடித்ததாம். அதற்கு அவர் உடன் சிகிச்சை பெற்றிருந்த போதிலும் அண்மையில் திடீரென ஏற்பட்ட ஏற்புவலி காரணமாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

## சுப்பர் சொல்கிறார்

### மகாபாரதக் கதையை விரும்புகிறார்கள்

அஸ்தினாபுரத்தில் தருமன், வீமன், அருச்சுனன் என்ற பஞ்சபாண்டவர்களும், துரியோதனன், துச்சாதன், கர்ணன் ஆகிய துரியோதனாதிகளும் துரோணாச்சாரியாரின் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தநாளிலே...

கர்ணனைப் பார்த்து அருச்சுனன் கேட்டான், 'ஏ கர்ணா, சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா?, என்று.

கர்ணன் சொன்னான்...... 'சமாதானம் நல்லது. சண்டை செய்தால் நான் உன்னை வெல்வேன். நீ தோற்பாய் என்று.

பின், அருச்சுனன் துரோணாச்சாரியாரிடம் போய் கேட்டான், சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா? என்று

அவர் சொன்னார், அடே விஜயா, சண்டையில் பணம் கிடைக்கும். இல்லாவிட்டால் மரணம் கிடைக்கும். என்று.

பின்பு அருச்சுனன் பீஷ்மாசாரியாரிடம் போய் அதே கேள்வியைக் கேட்டான்.

அதற்கு பீஷ்மர், குழந்தாய் சமாதானமே நல்லது. சண்டையில் நம்முடைய சத்திரிய குலத்துக்கே மகிமை கிடைக்கும். ஆனால் சமாதானத்தால் உலகத்து மக்களுக்கு நன்மை உண்டாகும் சமாதானத்தாலேனும், சண்டையாலேனும் 'தர்மம்' வெல்லத்தான் செய்யும். ஆதலால் சமாதானத்தை நாடு, மனிதர்கள் எல்லோரும் உடன் பிறந்தவர்கள் போல அன்பு செய்யவேண்டும் என்று தெரிவித்தார்

அஸ்தினா புரத்துக்கு வேதவியாஸர் வந்தார். அவரிடமும்போய் அருச்சுனன் சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா? என்று கேட்டான்.

வேதவியாஸர், இரண்டும் நல்லன. ஆனால் அவை சமயத்துக்குத் தக்கபடி கடைப்பிடிக்க வேண்டும். சமாதானமாகப் போக வேண்டிய காலத்தில் அடம்பிடித்து நின்று சண்டை செய்வது மடமை. அதனால் உள்ளதையும் இழக்க நேரிடும் என அறிவுரை வழங்கினார்.

இவை நடந்து பல வருடங்களாகிவிட்டன.

பஞ்சபாண்டவர்கள் சார்பாக கிருஷ்ணன், துரியோதனாதிகளிடம் தூது போகப் புறப்பட்டான்.

கிருஷ்ணனை வழிமறித்து வில்லுக்கு விஜயனான வீரன் அருச்சுனன் கேட்டான். சமாதானம் நல்லதா? சண்டை நல்லதா? என்று.

இப்போதய சூழ்நிலையில் சமாதானமே நல்லது என்று பதிலளித்தான் கிருஷ்ணன்.

பெரியோர்கள் அறிவுரைகளுக்கமைய அருச்சுனன் உட்பட்ட பஞ்ச பாண்டவர்கள் நடந்தார்கள். அதனையே அவர்கள் பெரிதும் விரும்பினர்

ஆனால் துர்யோதனாதிகள் எந்தப் பெரியவர்களின் வார்த்தைகளையும் மதிக்கவேயில்லை. முடிவு?

மகாபாரதக் கதையின் முடிவு எங்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதானே!

### கிளிநொச்சியில் மீளக்குடியேற்ற நிவாரணப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீளக் குடியேற்ற நிவாரணப் பணமாக ரூபா 2000-ம் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நேற்று முன்தினம் இப்பணம் வழங்கப்பட்டது

கிளிநொச்சியில் பொலிஸ் நிலையத்தில் வைத்தே, இலங்கை வங்கி உத்தியோகத்தர்களால் மேற்படி நிவாரணப் பணம் வழங்கப்பட்டது

பூநகரி, பளை, கிளிநொச்சி,

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகரகுவா யுத்த நிறுத்தரத்தின் எதிரொலி கலகக்காரர்கள் பேச்சுக்கு வர இணக்கம்

(மஞகுவா)

**நிகரகுவாவில் புரட்சி அரசாங்கத்துருப்புகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து சான்டினிஸ்டா அரசாங்கத்துடனுன சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வர; கொன்ருக் கிளர்ச்சியாளர்கள் இணங்கியுள்ளனர்,**

கலகக்காரர்கள் மேற்கொண்ட படுகொலைகளைத் தொடர்ந்து, கடந்த 19 மாத கால போர் நிறுத்தத்தை ரத்துச் செய்துவிட்டதாக நிக்கரகுவா ஜனதிபதி டானியல் ஒட்டேகா அறிவித்திருந்தார். இதனையடுத்து, அமெரிக்க ஆதரவுள்ள கொன்ருக் கிளர்ச்சிவாதிகளுக்கும், நிகரகுவா படைகளுக்குடையே கடும் யுத்தம் மூண்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

கொன்ரு நிலைகளை நிக்கரகுவாத் துருப்புகள் பீரங்கிகளாலும், தாங்கிகளாலும், மற்றும் ஹெலிகொப்டர்கள் கொண்டு தாக்கியதாகவும் கிளர்ச்சியாளர்களின் அறிக்கை ஒன்று கூறியது

அமெரிக்க ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் யுத்த நிறுத்தத்தை மீறி, அமைதி நிலைமையைக் குழப்பும் நடவடிக்கையாக தாக்குதல்களை மேற்கொண்டதினுலேயே யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக டானியல் ஒட்டேகா அறிவித்திருந்தார். கடந்த புதன்கிழமையன்று ஜனதிபதி ஒட்டேகா தெரிவித்திருந்த பேச்சுவார்த்தை யோசனை ஒன்றுக் கேற்ப கிளர்ச்சியாளர்கள் இப்போது கொள்கையளவில் ஒப்புதல் தெரிவித்துள்ளதாக 'கொன்ரு'க்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வரும் திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறுமென த் தெரிவிக்கப்படுகிறது.

## ஆப்கான் விவகாரம்

### ஐ. நா. சபை தீர்மானம்

(நியூயோர்க்)

ஆப்கானிஸ்தானில் எல்லா குழுக்களும் இணைந்துகொள்ளும் அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பான விவாதம் ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற சமயம், சோவியத் யூனியனும் பாகிஸ்தானும் பெரும் தர்க்கப்பட்டதாகவும், இறுதியில் பாகிஸ்தான் ஏனைய நாடுகளின் வேண்டுதலுக்கிணங்க மேற்படி தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் அரசை வீழ்த்த கெரில்லாப் போர் செய்து கொண்டிருக்கும் ஆயுதக்குழு ஒன்றிற்கு பாகிஸ்தான் ஆயுத உதவிகளைச் செய்துவருவது தெரிந்ததே.

## 10 நீதிபதிகள் சுட்டுக் கொல்லப்படுவர்!

(போகோட்டா)

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மீது அரசு கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதைத் தொடர்ந்து, போதைப் பொருள் வியாபாரத்தில் முக்கிய நகரமான மெட்லின் நகரில் நீதிபதி ஒருவர் அடையாளம் தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரும் சுட்டுக் கொல்லப்பட்டார். இரு வாரங்களுக்குமுன்பும் நீதிபதி ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

போதை மருந்துக்காரர் ஒருவர் கொல்லப்பட்டால் 10 நீதிபதிகளைச் சுட்டுக்கொல்வோம் என கடத்தல்காரர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

## இந்தியத் தாவரத்தில் புற்றுநோய்க்கு மருந்து

(டெல்லி)

இந்தியாவில் உள்ள தாவரங்களில் இருந்து புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கு அமெரிக்கப் புற்றுநோய்ச் சங்கம் முன்வந்துள்ளது

இந்தியாவில் குறிப்பாக ஆந்திராவில் உள்ள தாவரங்களில் இந்நோயை முற்றுக மாற்றக்கூடிய மருந்து வகைகளைத் தயாரிக்க முடியும் என மேற்படி சங்கம் கருதுகிறது.

இதற்காக எதிர்வரும் 5 ஆண்டுகள் இப் பரிசோதனையை செய்ய 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் சுதேச வைத்தியர்கள் பயன்படுத்துவதற்குரிய மருத்துவ தாவரங்கள் ஏராளமாய் வளர்க்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பிரதம நீதிபதி ஆனந்தன்

(சென்னை)

தமிழ் நாட்டின் பிரதம நீதி அரசராக நீதிபதி ஏ. எஸ். ஆனந்தன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தமிழ்நாடு ஆளுனர், முதலமைச்சர் முன்னிலையில் இவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## 'ஹெலி' விபத்து எண்மர் பலி

(அம்மன்)

ஜோர்தானில் அம்மானுக்குத் தெற்கே ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் எட்டு இராணுவ வீரர்கள் இறந்ததுடன் ஒருவர் காயமுற்றுர்.

தொழில் நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

## சங்கத்தானையில் கந்தஷஸ்டி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானையிலுள்ள ஸ்ரீ மீனுட்சி அம்பாள் ஆலயத்தில் கந்தஷஸ்டி விழா இம்முறை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை சூரசம்ஹார வைபவம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ் துறை விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன், கந்தஷஸ்டி மகிமைபற்றி தினமும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றுர்.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பக்திபரவசத்தோடு பெருமளவில் சென்று இச் சொற்பொழிவுகளைச் செவிமடுத்து வருகின்றனர்.

## மாகாண சபையை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்தல்.

2. மாகாண சபைகளை மாகாண அரசுகளாக மறுவமைத்தல்,

3. பல தேர்தல்களை விடுத்து, எல்லா சபைகளுக்கும் ஒரே தேர்தலை நடத்துமுகமாக, தேர்தல் சட்டத்தை திருத்துதல்,

4. புவியியல், பொருளாதார, இன எண்ணிக்கை அடிப்படையில் மாகாண எல்லைகளை வகுத்தல்,

5. கிராமிய சபை முறையை மீள அறிமுகப்படுத்தல், கீழ்க்கண்ட காரணிகள், இம் மாற்றத்தை அவசியப்படுத்துகின்றன.

[அ] இலங்கையின் நிலப் பரப்பு ச. கி. மீ. 25,000 மக்கள் எண்ணிக்கை, 16 மில்லியன். பதியப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை; 9·4 மில்லியன்.

(ஆ) மாகாண சபைகள் அமைக்கப்பட்ட பின் மேல் (அ) குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சுகள் தவிர்ந்த ஏனைய அமைச்சுப்பொறுப்புமாகாண சபைகளிடம் விடப்பட்டுள்ளன. எனவே. இவைகளுக்கான மத்திய அரசு அமைச்சுக்கள் அவசியமற்றவை. அதேவேளை அமைச்சுபாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது, அநாவசிய செலவினங்களை குறைக்க உதவுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண அரசுகளுக்கும் இடையில் உறவை வளர்க்க உதவும்.

(இ) அடிப்படைத்தேர்தல் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமாக அமைவதன் மூலம், செலவினங்களையும் மனித சக்தி விரயத்தையும் தவிர்க்கலாம்

(ஈ) மாகாண எல்லைகளை மீள வகுப்பதன் மூலம் மாகாணங்களின் எண்ணிக்கை 5 ஆக குறைப்பதுடன், நிர்வாக செலவுகளை குறைப்பதற்கும் வகை செய்யலாம். இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணவும், நிர்வாகத்தை ஜனநாயகமயப் பயப்படுத்தவும் இது உதவும்.

(உ) கிராமசபை முறையை இன்றைய சமூக – பொருளாதார நிலைக்குஏற்பமீள அமைப்பது கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி பணிகளை மேற் கொள்வதற்கும், அரசியல் ரீதியான முடிவுகளை மேற் கொள்ளுவதற்குமான ஜனநாயக நீரோட்டத்தில் நுழைவதை இலகுவாக்கும். குறிப்பாக. கிராமசபை முறைதெற்காசிய மண்டல நாடுகளில் மிக முக்கியமான நிறுவனமாகும் அது, இன்றைய தேவைகளின் அடிப்படையில், அவசிமான அதிகாரங்களுடன் மீண்டும் அமைக்கப்படுவது, கிராமக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதாகும்.

மேற் குறிப்பிட்ட யோசனைகளின் யதார்த்த தன்மையை புரிந்து கொள்வதற்கு, எமது அண்டைய நாடான இந்தியாவை சற்று நோக்குவது முக்கியமாகும்.

"இந்தியாவின் இன்றைய ஜனத்தொகை 80 கோடி வாக்காளர் தொகை ஏறக்குறைய 50 கோடியாகும். பரப்பளவில் இந்தியா எமது நாட்டைவிட 60 மடங்காகும். ஆனுல், லோக் சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 542, ராஜ்ய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 545, ராஜ்ய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 245 மாநில அரச சபை எண்ணிக்கை 25''

இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நமது நாட்டின் சனத்தொகை, நமது வரையறுக்கப்பட்ட வளங்களின் அடிப்படையில், நமது அரச அமைப்பு முறை மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமையாகும்.

ஆகவே, ஒரே இடத்தில் தேக்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஜனநாயக முறையில் பரவலாக்கும் விருப்பு செயலுருக் கொள்வதெனின் இன்றைய முறைக்கு அடிப்படை மாற்றத்தை கொடுப்பதவசியம்; இலங்கையின் எல்லா இன மக்களினிடையில் ஐக்கியத்தையும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் பேணிப்பாதுகாக்க அரசியற் கட்சிகளினது குறுகிய கருத்துக்களில் இருந்து மீண்டு மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்படுவது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத தேவையாகும்.

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மாநாடு

(திருமலை)

எதிர்வரும் ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாநாடு மாகாண உள்துறை அமைச்சு மாநாட்டு மண்டபத்தில் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தலைமையில் நடைபெற உள்ளது.

இம் மாநாட்டில் வடக்கு கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர், திரு. என். சிவராசா உள்துறை அமைச்சின் பதில் செயலாளர் திரு. என். பதிமநாதன் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னர், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் கலந்து கொள்வார்கள்.

அடுத்த வருடத்திற்கான புனர் வாழ்வுப் பணிகள், அபிவிருத்தித் திட்டங்கள், உள்ளூராட்சி அமைச்சின் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய விடயங்களை இம் மாநாட்டில் ஆராயப்பட உள்ளதாக மாகாண தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21-10-1956

மறைவு 04-11-1988

### திரு. சி. வின்சன்

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய் இருந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புமகனே, நீர் எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு சென்றுலும் ஒரு கணமும் உன் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், ஐயா, அம்மா
சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாளிமார்,
உற்றுர், உறவினர்.

புங்குடுதீவு,
1, ஆம் வட்டாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

## வாழ்க்கைச்செலவு உயர்வு

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் வானளாவ உயர்ந்து கொண்டே கொல்கின்றது சாதாரண தொழிலாள, விவசாயி கள் கிடைக்கும் அற்ப சொற்ப வருவாயைக் கொண்டு அரைப் பட்டினி, குறைப்பட்டினியாகவே வாழ்க்கையை ஒரு வாறு நகர்த்திச் செல்கின்றனர்.

அரச ஊழியர்களைப் பொறுத்தவரை தமக்கு கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு, வாழ்க்கைக்கான வரவு செலவுத் திட் டத்தை தயாரிக்க முடியாத நிலையில் செய்வதறியாது தத்த ளிப்பதை நன்கு அவதானிக்க முடிகின்றது. பிள்ளைகளின் கல் விச்செலவு, போக்குவரத்துச் செலவு என்பவற்றோடு நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியம் தேவைப்படும் உணவுப் பொருட் களைக் கூட வாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ள னர்.

அன்றாடத் தேவைகளான அரிசி, மா, சீனி, பால்மா, மீன் இறைச்சி மரக்கறி என்பனவற்றின் விலைகள் சமீப காலங்களில் முன்னர் இருந்ததிலும் பார்க்க இரண்டு மடங்காக அதிகரித் துள்ளது. சாதாரண குடும்பத்தவர்கள் ஒரு நேர உணவுத் தேவைக்காக குறைந்த பட்சம் நூறுரூபாயாவது செலவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலையில் சாதா ரண நடுத்தர குடும்பங்கள் எவ்வகையிலும் மனிதனுக்குத் தேவையான போஷாக்கு நிறைந்த உணவைத் தினமும் சாப் பிட முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

கிடைக்கும் சம்பளத்திற்கேற்ப நாளாந்தத் தேவைகளை சுருக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாகவே அநேகர் நோயாளிகளாக மாறிவருகின்றனர். ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகளை, தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதற்கோ, அன்றி பிள்ளைகளுக்கு ஒரு பால்மாவை வாங் கிக்கொடுப்பதற்கோ முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள் ளனர்.

உடுபுடவைகளின் விலைகளாகஇருந்தாலும்சரி, சவர்க்காரங் களின் விலைகளாக இருந்தாலும் சரி எல்லாமே யானைவிலை, குதிரை விலையாகவே இருக்கின்றது.

எமது நாட்டின் பிரதான உற்பத்திப் பொருளாக தேயிலை இருந்தபோதிலும், இன்று தேனீரின் விலையைப் பார்க்கும் போது இதுவும் இறக்குமதியாகும் பானமோ என எண்ணவே தோன்றுகின்றது.

வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி வாழ்ந்த ஏழை மக்களின் ஒரே அபிமான உணவான பாணின் விலை கூட, இன்னும் சில நாட்களில் ஆறு ரூபாவாகலாம் என பொருளாதார வல்லு னர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். செப்டெம்பர் மாதத்துக் கான வாழ்க்கைச் செலவுப்புள்ளி 851.5 எனக்கணிப்பீடுசெய் யப்பட்டுள்ள போதிலும், அத்தியாவசியச் சமான்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

பெற்றோலின் விலையும் 25 சத வீதமாக உயர்த்தப்பட் டுள்ளது. இதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் மேலும் அதிகரிக்க இடமுண்டு. எந்தப் பக்கம் திரும்பினாலும், எவற் றின் விலையைப் பார்த்தாலும் அவை முன்பிருந்ததிலும் பார்க்க இரண்டு மடங்காகவே இருக்கின்றது. ஆனால் சம்ப ளமோவெனில் முன்னர் இருந்தவாறே இன்னமும் தொடர் ந்து கொண்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் பரவலாக வர்த்தகர்கள் கடத்தப் பட்டு பெருந்தொகைப் பணம் 'கப்பமாக' வசூலிக்கப்படுவ தால், அம் முதலாளிகள் தாம் இழந்த பணத்தை பொருட் களின் விலைகளை அதிகரிப்பதின் மூலமாக மீளப்பெற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதுவும் யாழ் மாவட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினையாகிவிட்டது. அதே சமயம் நூற்றுக்கும் மேற்பட்ட லொறிகள் அத்தியாவசிய சாமான் களோடு வவுனியாவை அண்டிய காட்டுப் பகுதிகளில் தடுத்து வைத்து, கப்பப்பணம் கேட்பதாலும், உணவுப் பொருட்களுக் குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனைச் சாட்டாகக் கொண்டும் பொருட்களின் தட்டுப்பாட்டை கொள்ளை லாபம் அடிக்கப் பயன்படுத்துகின்றனா என்னும் உண்மையையும் நாம் விளங் கிக் கொள்ளவேண்டும்.

இத்தகைய சூழ் நிலையில் பல்வேறு தொழிற்சங்கங்களா லும், பொதுவான சம்பள உயர்வுக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளிற்கேற்ப வாழ்க்கைச் செலவுப் படியை அதிகரிப்பதுடன், ஆகக் குறைந்த சம்பளமாக 2500 ரூபா இருக்கவேண்டுமென்றும் கோரிக் கையை தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன. இன்றைய வாழ்க்கைச் செலவை நடைமுறையோடு ஒப்பிடுப் பார்க்கும் எவராலும் இந்த சம்பள உயர்வுக் கோரிக்கை நீதியான தும், நியாயமானதும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும், ஆகவே அரசாகவிருந்தாலென்ன, கூட்டுத்தாபனங்களாக இருந்தாலென்ன, அன்றி தனியார் துறையாக இருந்தாலும் சரி ஒவ்வொருவரினதும் குறைந்த படச சம்பளமாக 2500 ரூபாவை நிர்ணயம் செய்ய முன்வரவேண்டும். இக் கோரிக்கை நீதியானதும், நியாயமானதுமாகும் தொழிலாள வர்க்கத்தின் சகலபிரிவினரும் இக் கோரிக்கையின் பின்னால் அணி திரண்டு இருப்பதினையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின் றோம்.

### 9வது மக்களவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் பல கட்சிகள் போட்டி யிடுகின்றன.

பல தொகுதிகளில் ஜனதா தளத்திற்கும் பாரதீய ஜனதா கட்சிக்கும் இடையில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டு, எதிர்க் கட்சிகள்சார்பில் இத்தொகுதி களில் ஒரேஒரு வேட்பாளரை நிறுத்தும் நிலைமை ஏற்பட்டி ருக்கும் அதேசமயம், கம்யூ னிஸ்ட் கட்சியினர் ஜனதா தளத்துடன் இணைந்து பொது வேட்பாளர்களை நிறுத்தி யுள்ள இடங்களில் எல்லாம் பாரதீய ஜனதா தனியாக வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறது.

எதிர்க் கட்சிகளின் குழப்ப நிலை காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி வாய்ப்பைத் தேடித் தரும் என்று அரசியல் அவ தானிகள் கருத்துத் தெரிவிக் கின்றனர்.

## இந்திய தேர்தல் களம்

# 422 தொகுதிகளில் 6,900 பேர் போட்டி

(நமது சென்னை நிருபர்)

இந்திய மக்களவைத் தேர் தலுக்காக நாடுமுழுவதும் 19 மாநிலங்களிலும் 6யூனி யன் பிரதேசங்களிலும் வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான கெடு முடி வடைந்துள்ளது. மொத்தம் 422 மக்களவைத் தொகுதி களில் சுமார் 6900 பேர் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீநகர் மக்களவைத் தொகுதியிலிருந்து தேசிய மாநாட்டுக் கட்சி வேட்பா ளர் முகமது ஷபி போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட் டதையடுத்து, மொத்தம் 528 மக்களவைத் தொகுதி களுக்கு தேர்தல் நடைபெற வுள்ளது. கர்நாடகம், குஜ ராத், சிக்கிம் ஆகிய மாநிலங் களில் வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான கெடு இன்னும் முடிவடையவில்லை.

### சவாண் வாபஸ்

மத்திய நிதித்துறை அமைச் சரான எஸ். பி. சவாண் மகா ராஷ்டிர மாநிலத்திலுள்ள நான்டெட் மக்களவைத் தொகுதியில் தாக்கல் செய்தி ருந்த வேட்புமனுவை கடைசி நேரத்தில் வாபஸ் பெற்றார். இதே தொகுதியில் அவரது மகன் அசோக் சவாண் (எம். பி) போட்டியிடுகிறார். மகா ராஷ்டிர மாநிலத்தில் மொத் தம் 48 மக்களவைத் தொகுதி களிலும் 1052 பேர் போட்டி யிடுகின்றனர்.

### வி. பி. சிங் எதிர் ஹரி கிஷன் சாஸ்திரி

உத்தரப் பிரதேச ஃபடே பூர் தொகுதியில் ஜனதா தளத் தலைவர் விஸ்வநாத் பிரதாப் சிங்கை எதிர்த்து மத்திய விவசாயத் துறைத் துணை அமைச்சரான ஹரி கிஷன் சாஸ்திரி இ. காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார். சுமார் 10 இலட்சம் வாக்கா ளர்கள் உள்ள இத் தொகுதி யில் பெரும்பாலானவர்கள் தாக்கூர் இனத்தைச் சேர்ந்த வர்கள்.

### காங்கிரஸ் தொகுதி

உத்தரப் பிரதேசத்திலுள்ள பில்ஹவுர் தொகுதியில் வி. பி. சிங்கின் சகாவான அருண் நேருவை எதிர்த்து இ. காங்கிரஸ் சார்பில் ஜக தீஸ் அவஸ்தி போட்டியிடு கிறார். கடந்த நாடாளுமன் றத் தேர்தலில் இத்தொகுதி யில் அவஸ்தி 81,000 வாக்கு கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் என்பது குறிப் பிடத்தக்கது. 9,66,000 வாக் காளர்களைக் கொண்ட பிரா மணர்கள் அதிகமாக வசிக் கும் இத் தொகுதி நெடுங் காலமாக இ. காங்கிரஸ் வசம் இருந்து வருகிறது.

### ராஜீவும் 46 பேரும்,

அமெதி தொகுதியில் மூன் றாவது முறையாக தேர்தலில் நிற்கும் பிரதமர் ராஜீவ் காந் தியை எதிர்த்து மொத்தம் 46 பேர் போட்டியிடுகிறார்கள் ஜனதா தள வேட்பாளர் ராஜ் மோகன் காந்தி, பகு ஜன சமாஜக் கட்சியைச் சேர்ந்த கான்சிராம் ஆகி யோர் குறிப்பிடத் தக்கவர் கள்.

அமெதி தொகுதி மக்க ளவை உறுப்பினராக இருந்த தனது சகோதரர் சஞ்சய் காந்தி இறந்ததால் 1981ல் நடைபெற்ற இடைத் தேர் தலில் முதல்முதலாக ராஜீவ் அமெதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மீண்டும் 84-ல் மக்களவைத் தேர்தல் நடந்தபொழுது போட்டி யிட்ட ராஜீவ்காந்தி 83·7 சதவீத வாக்குகளை மேலதிக மாகப் பெற்று எதிர்க்கட்சி வேட்பாளரான மேனகா காந் தியைத் தோற்கடித்தார்.

தெலுங்கு தேச கட்சியில் என். டி. ராமராவின் மூத்த மருமகனும் சுகாதார அமைச் சருமான டி, வெங்கடேசுவர ராவ் பரசூர் தொகுதியிலும், இளைய மருமகனை சந்திர பாபு நாயுடு குப்பம் தொகுதி யிலும் போட்டியிடுகின்றனர்.

## தமிழ்நாடு 39 தொகுதிகளில் 468 பேர் போட்டி; 242 மனு வாபஸ்

தமிழ் நாட்டிலுள்ள 39 தொகுதிகளில் மொத்தம் 468 பேர் போட்டியிடுகின்ற னர். அதிகபட்சமாக வட சென்னைத்தொகுதியில் மொத் தம் 28 வேட்பாளர்கள் போட் டியிடுகின்றனர்.

மாநிலம் முழுவதும் 731 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, கடைசி நேரத் தில் 242 பேர் வாபஸ் பெற் றனர். 21 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### மோதும் கட்சிகள்

20 தொகுதிகளில் தி மு. க. வும் காங்கிரஸ் கட்சியும் எதிர் த்து மோதுகின்றன, இதே போல தி. மு. க. வும் அ. தி. மு. க. வும் ஒன்பது தொகுதி களில் எதிர்த்துப் போட்டியிடு கின்றன. இரண்டே இடங்க ளில் போட்டியிடும் ஜனதா தளம் அந்தந்தத் தொகுதிக ளில் இ. காங்கிரசை எதிர்த் துக் களத்திலுள்ளது.

### போட்டித் தொகுதிகள்

சிவகாசி தொகுதியில் முன் னாள் அ.தி.மு.க. அமைச்சர் காளிமுத்துவும், மாநிலங்க ளவை தி.மு க. உறுப்பினர் வை.கோபால்சாமியும் போட் டியிடுகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் இரண்டு பிரிவு களைச் சேர்ந்த தலைவர்கள் அப்துல் ஸமது, சட்டப் பேரவை உறுப்பினர் அப்துல் லத்தீப் ஆகிய இருவரும் வேலூர் தொகுதியில் மோது கின்றனர்.

வடசென்னையில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் என். வி என். சோமுவை எதிர்த்து இந்திய ஐக்கிய பொதுவுட மைக் கட்சி சார்பில் தா. பாண்டியன் போட்டியிடுகி

தென்சென்னைத் தொகுதி யில் தி.மு.க. வில் சேர்ந்து போட்டியிடும் மாநிலங்க ளவை உறுப்பினர் ஆலடி அருணை எதிர்த்து இ. காங்கிரஸ் சார்பில் வைஜயந்திமாலா போட்டி யிடுகின்றார்.

தமிழக இ, காங்கிரஸ் தலை வர் வாழப்பாடி ராமமூர்த்தி போட்டியிடும் கிருஷ்ணகிரி தொகுதியில் அவரை எதிர் த்து ஜனதாதளம் சார்பில் வெங்கடசாமி நிற்கிறார்.

### அமைச்சர் தொகுதிகள்

மத்திய அமைச்சர் ப. சிதம் பரம் போட்டியிடும் சிவகங் கைத் தொகுதியில் அவரை எதிர்த்து தி.மு.க. வேட்பா ளர் ஏ. கணேசன் உட்பட 8 பேர் போட்டியிடுகின்றனர்.

அமைச்சர் அருணாசலம் போட்டியிடும் தென்காசி தொகுதியில் இடது கம்யூ னிஸ்ட் வேட்பாளர் ஆர். கிருஷ்ணன் உட்பட 7 பேர் போட்டியிடுகின்றனர்.

### கோவில்களுக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரர் கோயிலுக்கு 92000 ரூபாவும், பிள்ளையார் கோவி லுக்கு 1 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு 25000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. கந்த ளாய் பிள்ளையார் கோவி லுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 50000 ரூபாவும் வழங்கப் பட்டுள்ளது.

திருமலை மூர்பின் ஜும்மா பள்ளிவாசலுக்கு ஒதுக்கப் பட்ட இரண்டு இலட்சம் ரூபாவில் 50000 ரூபாவும் கிண்ணியா பள்ளிவாசலுக்கு ஒதுக்கப்பட்ட 10000 ரூபா வும் வழங்கப்பட்டுள்ளது.

கன்னியா பிரின்ஸ் தேவா லயத்துக்கு 1,25,000 ரூபா ஒதுக்கப்பட்டு 31,250 ரூபா வழங்கப்பட்டுள்ளது. அத் துடன் திருமலை ஸ்ரீ ஜயதுாப ராம விகாரைக்கு 1,25,000 ரூபாவும் இரத்தினசிங்க பிள் ளையார் கோவிலுக்கு1,25,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

லிங்கநகர் பிள்ளையார் கோவில், குச்சவெளி சித்தி விநாயகர் ஆலயம்,வெருவெளி சிவன் கோவிலில் கன்னியா புளியடி காளி கோவில் ஆகி யவற்றின் புனர்நிர்மாண மதிப்பீட்டு அறிக்கைகளையும் கோரப்பட்டுள்ளதாக திரு. [illegible] தெரிவித் தார்.

### பூந்தோட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரன் அவர்களும் இக் கிராமத்தின் பல்வேறு பகுதி களையும் பார்வையிட்டதோடு, மக்களின் தேவைகளையும் கேட்டறிந்தனர். வவுனியா விலிருந்து பூந் தோட்டம் செல்லும் வீதியை செப்பனிட் டுத் தருவதாகவும், பெரிய குள அபிவிருத்திவேலை பற்றிய விபரங்களையும் கேட்டறிந்த னர்.

### முஸ்லீம்களுக்கென

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார். அவர் மேலும் பேசுகையில்:

முஸ்லீம்கள் இன்று கிடைத் துள்ள அரிய சந்தர்ப்பத்தை எமது சமுதாயத்தில் நலனுக் காகப் பாவிப்பதில் நிதான மாக இருப்பதோடு, முஸ்லீம் காங்கிரசின் தலைமையைப் பலப்படுத்தவும் வேண்டும்.

முஸ்லீம்களின் பாதுகாப்பை முஸ்லீம்களே உறுதிப்படுத்தக் கூடியதாக அனைத்து முஸ்லீம் களும் செயல்பட வேண்டும்.

இக் கருத்தரங்கில் எதிர்க் கட்சிக் கொறடாவான ஜவாத் மரிக்கார் உட்பட மற்றும் பலர் பேசினர்.

### கிளிநொச்சியில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டாவளை ஆகிய உதவி அர சாங்க அதிபர் பிரிவைச் சார்ந் தவர்களுக்கே இக் கொடுப் பனவுகள் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத் தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் 4-11-1989ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org